**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பாதாள சாக்கடை திட்டம் - வளசரவாக்கம் பேரூராட்சி - பாதாள சாக்கடை திட்டம் - கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 1) துறை**

அரசாணை (2டி) எண் 110 நாள் 28.10.99.

படிக்கப்பட்டது

1.அரசாணை(2டி) எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 1) துறை நாள் 3.3.98

2.பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித எண் 30211/97/டி1 நாள் 12.5.99 மற்றும் 19.8.99

3)சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநரின் நேர்முக கடித எண் செகுநிவா/சிஇ(ளி&வி) VALA / So 99 நாள் 15.7.99,

4)தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் தலைமை நிர்வாக அலுவலரின் கடித நாள் 1.10.99.

******

ஆணை: -

இராமாவரம் ஊராட்சிப் பகுதிகளையும் உள்ளடக்கிய, வளசரவாக்கம் பேரூராட்சி பகுதிகளில் ஒருங்கிணைந்த வெள்ள நீர் வடிகால் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டத்தை செயப்படுத்த வேண்டிய அவசியத்தை பேரூராட்சிகள் இயக்குநர் அரசுக்கு வலியுறுத்தி, இத்திட்டத்திற்காக இராமாவரம் ஊராட்சிப் பகுதிகளில் செலவிடப்படும் தொகையை தமிழ்நாடு அரசு ஏற்று தகுந்த ஆணையிடவும் வளசரவாக்கம் கழிவு நீர் அகற்றும் திட்டத்தை உடனே துவக்கவும் ஆணை வேண்டியிருந்தார். இதுபற்றி சம்பந்தப்பட்ட பேரூராட்சி

மன்றத் தலைவர், பேரூராட்சிகள் இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியோருடன் கலந்து பரிசீலனை செய்து வளசரவாக்கம் பேரூராட்சி முழுவதற்கும் கழிவு நீர் அகற்றும் திட்டத்தை செயற்படுத்துவதற்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தை முகவராக (கிரீமீஸீநீஹ்) நியமித்து பார்வை 1 ல் படிக்கப்பட்ட ஆணையில் அரசு ஆணை வெளியிட்டது.

2. வளசரவாக்கம் பேரூருாட்சியில் தொழில் நுட்ப ஆய்வு நடத்தி பாதாள சாக்கடைத் திட்டத்தை செயற்படுத்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை "கட்டுமான காலத்திற்கான வட்டித் தொகை" (மிஞ்சி) நீங்கலாக ரூபாய் 1921.63 லட்சம் எனவும் இது குறித்து தலைமை நிர்வாக அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் (ஜிழிஹிஞிதி) தொழில்நுட்பம் மற்றும் திட்ட ஆலோசனையும் பெறப்பட்டது எனவும் இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு கட்டுமான காலத்திற்கான வட்டித் தொகை ரூபாய் 78.68 லட்சம் உள்பட மொத்தம் ரூபாய் 2000.32 லட்சம் எனவும் இத்தொகையை கீழ்க்கண்டவாறு பெறலாம் எனவும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட தலைமை நிர்வாக அலுவலர் பரிந்துரை செய்துள்ளார்:

ரூபாய் லட்சங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின்

| | |
|---|---|
| கடன் (Loan from TNUDF) | 374.66 |
| சென்னை மாநகர்த் திட்டத்தின்கீழ் கடன் (Mega City Programme) | 374.66 |
| பயனீட்டாளர் வைப்புத் தொகை வசூல் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தால் பராமரிக்கப்படும் மான்ய நிதியிலிருந்து | 941.00 |
| சிக்கன துப்புரவு சாதனங்கள் மான்யம் (Low Cost Sanitation Grant) | 10.00 |

மேற்படி தொகை வரும் 2000 - 2001 ஆம் ஆண்டில் ரூபாய் 960.00 லட்சமும் 2001 - 2002 ம் ஆண்டில் ரூபாய் 1039.45 லட்சமும் செலவழிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

1. வளசரவாக்கம் பேரூராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்த இப்பணிகளுக்கு தேவைப்படும் தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதிக் கழகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு சேவை நிறுவனங்களிடமிருந்து பெறலாம் எனவும் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த வேண்டி திட்டப் பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டதல் அதற்கான மதிப்பீடு தொகை ரூபாய் 1911.63 லட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும் இம்மதிப்பீட்டுத் தொகையினை அடிப்படையாகக் கொண்டு திட்டத்தினை செயல்படுத்த சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநரின் ஆலோசனைப் படி

பயனீட்டளார்களிடமிருந்து குடியிருப்பு ஒன்றுக்கு ரூபாய் 12000/ - வீதமும் வணிக/ தொழிற்சாலை பகுதிகள் ஒன்றுக்கு ரூபாய் 24000/ - வீதம் தொடர் வைப்புத் தொகையாக வசூலிக்கவும், தொடர்ந்து குடியிருப்பு மற்றும் வணிக/ தொழிற்சாலைகளுக்கு மாதாந்திர கட்டணம் நிர்ணயம் செய்தும் இத்தொகையில் முதல் தவணை, 30.9.99 - க்குள்ளும் இரண்டாம் தவணையை 31.12.99 - க்குள்ளும் வசூல் செய்து இத்திட்டத்தினை செயல்படுத்த வளசரவாக்கம் பேரூராட்சி மன்றம் தனது 26.7.99 ம் தேதிய தீர்மானம் எண் 67 ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும் பயனீட்டாளர்களிடமிருந்து வசூல் செய்யும் தொடர் வைப்புத் தொகை போக மீதம் உள்ள தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் அடிப்படை வளர்ச்சிக் கழகத்திடம் கடன் மற்றும் மானியம் மூலம் பெற்று செயல்படுத்தவும் இப்பேரூராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் வளசரவாக்கம் பேரூராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவது குறித்து நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகையை பயனீட்டாளர்களிடமிருந்து குறிப்பிட்ட காலத்தில் இருந்து வசூலிக்க தேவையான உத்தரவுளை பிறப்பிக்குமாறு அரசினை பேரூராட்சிகள் இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பேரூராட்சிகள் இயக்குநரின் பரிந்துரையை ஏற்று கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

(அ)பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்காக பயனீட்டாளர்களிடமிருந்து வைப்புத் தொகையாக ரூபாய் 12000/ - வசூலிக்க கொள்கை அளவில் பேரூராட்சிக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ)மொத்த வைப்புத் தொகையில் 50 சதவீதம் வசூல் செய்யப்பட்டவுடன் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க ஏதுவாக தக்க செயற்குறிப்பனை அனுப்புமாறு பேரூராட்சிகள் இயக்குநரை கேட்டுக் கொள்ளப் படுகிறார். 50 சதவீதத் தொகையை கேட்பதற்கான கால அளவினை பேரூராட்சியே நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

(இ)உத்தேசிக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டத்தினை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் செயல்படுத்துவதால், இதன் பொருட்டு ஏற்படும் திட்ட வடிவமைப்பு மேற்பார்வை நிர்வாகம் ஆகியவற்றிற்கு ஏற்படும் செலவுத் தொகையை முடிந்த வரை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு மான்ய நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கப்படுகிறது.

(ஈ)இப்பாதாள சாக்கடை திட்டம், வைப்புத் தொகை திட்டமாக சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் செயல்படுத்தப்பட உள்ளதால் வாரியத்தில் உள்ள நடைமுறைப்படி இதற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

(.உ)இத்திட்டம் தொடர்பாக வீட்டு பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வைப்புத் தொகையை செயல் அலுவலர் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் பெயரில் தனியாக ஒரு கூட்டுக் கணக்கு ஆரம்பித்து அதனை பராமரிக்கும்படி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். இக்கணக்கில் உள்ள தொகை எக்காரணத்தைக்

கொண்டும் பாதாள சாக்கடை திட்டப் பணியை தவிர வேறு எந்த பணிக்காகவும் செலவு செய்ய கூடாது என்று ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.மாலதி

அரசு செயலாளர்

பெறுநர்

பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை 108.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வளர்ச்சி நிறுவனம், 84 டிடிகே சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை 18.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு சேவை மையம், 112 தியாகராயர் ரோடு, தி.நகர், சென்னை 17.
பேரூராட்சிகள் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம்,காஞ்சிபுரம்.
செயல் அலுவலர், வளசரவாக்கம் பேரூராட்சி, சென்னை 87.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்